சக்ராவர்த்தினி

"கேடில் விழுச்செல்வங் கல்வி ஒருவருக்கு
மாடல்ல மற்றை யவை."

VOL. VI. } MADRAS, APRIL 1911. {NO. 9,
தொகுதி ௬. } சென்னை, ஏப்ரல்மீ 1911. {பகுதி ௯,

ஆசை

இவ்வுலகத்தில் ஆசையில்லாத மனிதர்களில்லவேயில்லை. இது இயல்பாகவே ஏற்பட்டது. ஆசையை யொழித்தவரைக் காண்பதரிது. மண், பொன், மனை, மக்கள் முதலியவைகளிலோ அல்லது மற்றேதேனும் மொன்றிலோ ஆசைகொண்டு தாம் ஆசைகொண்டவைகளைப் பெற இரவு பகலாக உழைப்பது உலக வழக்கமாக விருக்கின்றது. இந்த ஆசையென்னும் குணம் ஒன்று மனிதர்களுக்குள் ஏற்படாத விஷயத்தில் உலகத்தில் மானுடர்கள் எதிலும் பிரவேசித்து அதை முடிக்க முற்படார்கள். அவரவர் கிடைத்ததை யடைந்து திருப்தி கொண்டு சும்மாவிருந்து விடுவார்கள். இதனாலேயே சர்வ வல்லமையுள்ள ஜகதீசன் ஜீவராசிகளுக்கு ஆசையென்னும் குணத்தைக் கொடுத்திருக்கிறார் போலும்.

முதலாவது ஸ்திரீ புருஷர்கள் ஒத்திருப்பதும், ஒருவரை யொருவர் பிரியமாய் நடத்துவதும் ஆசை காரணமாகத் தான். இந்த ஆசை காரணமாகப் பறவை முதலியவைகளும் ஒன்றுக்கொன்று உதவிபுரிந்து கொள்வதைநாம்கண் கூடாகப் பார்க்கிறோம். ஆகவே ஆசையென்பது இருக்கவேண்டு மென்றேற்பட்டது. இது இப்படியிருக்க, "ஆசை பொல்லாது" "ஆசையையொழிக்கவேண்டும்" என்றும் உலகம்சொல

னுகின்றதேயெனில், எதிலும் அளவுக்கு மிஞ்சி ஆசை கொள்வதும் துராசைப்படுவதும் கூடாதென்பதன் பொருட்டேயாம். இதனாலே "பேராசை பெருநஷ்டம்" என்றும் "அதிக ஆசை அதிக நஷ்டம்" என்றும் உலக வசனங்கள் நிகழ்கின்றன. ஒரு பையன் கல்வியை மேன்மேலும் பெறவேண்டுமென்று ஆசை கொள்வதில் தீங்கில்லை. ஏனெனில் கல்வியையொருவன் எவ்வளவுக்கெவ்வளவு அடைகிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் இகபர சாதகமான நல்வழியிற் சென்று சுகமுறுவானன்றோ? இதுபோல் பொருளீட்டுவதிலுங்கூடும்; "பொருளிலார்க்கிவ்வுலகமில்லை"; பொருளே இகபர சுகங்களுக்கு இன்றியமையாததொன்று; "பணமில்லாதவன் பிணத்திற்குச் சமானவன்"; என்பீர்களாயின், இது கல்வியைப் போலன்று. கல்வியிற் கொள்ளும் ஆசை எவ்விதத்திலும் ஒருவனைத் தீங்குக் குள்ளாக்காது. பணம் அப்படியல்ல. உலகத்தில் பணம் படைத்தவர்களிற பெரும்பாலர் "செல்வம் வந்துற்றகாலைத் தெய்வமும் சிறிதுபேணார், சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையும் நோக்கார் வல்வினை விளைவு மோரார் மண்ணின்மேல்வாழுமாந்தர்" என்றபடி நடக்கத்துணிந்து விடுகிறார்களே யொழிய நல்வழி கடைப்பிடித்துச் செல்பவர் அரிது. அது அவர்கள்மேல் கூறத்தக்க குற்றமன்று அது பணத்தின்குணம். ஆகையால் நல்லனவைகளைக் கடைப்பிடித்து அவைகளில் ஆசையைச் செலுத்தியும் தீயவைகளில் ஆசையையொழித்தும் வரவேண்டும். இதுவரையில் யாம் கூறிவந்தவைகள் முற்றும் இவ்வுலக வாழ்விற்குரியன. தவிரக் "கிட்டாதாயின் வெட்டென மற" என்றபடி கிட்டாத பொருளில் ஆசை கொண்டால் அதனால் துக்கமும சிரமமும் அதிகரிக்கும். ஆகையால் அதையொழிக்க வேண்டும்.

பரலோக வழியிலாயின் ஆசையை முற்றும் விலக்கிவிட வேண்டும். எவன் ஆசையைக் கொள்கிறானோ அவனுக்குப் பிற

விக்கேதுவான பாபங்களும் துக்கங்களும் நேரிடும். இதனாற்றான் தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவர்,

"அவாவென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றுந்
தவாப் பிறப்பீனும் வித்து" என்றார்.

அதாவது—எல்லாவுயிர்கட்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பினை விளைக்கும் வித்து ஆசை என்பதாம். பிறப்பினைக் கொடுக்கும் விதையென்றார் ஆசையை ஆசை அத்துணைக் கொடுமையையுடையது. இது வன்றி,

"அவாவில்லார்க் கில்லாகுந் துன்ப மஃ துண்டேற்
றவா அது மேன்மேல்வரும்" என்றும் போதித்தனர்.

அதாவது—ஆசையில்லாதவர்க்கு வரக்கடவது ஒரு துன்பமுமில்லை. ஒருவருக்கு பிறகாரணங்களெல்லாமின்றி ஆசை யென்பதொன்றுண்டாயின், அதனாலே எல்லாத் துன்பங்களும் முடிவின்றி இடைவிடாமல் வரும் என்பதாம். ஆகையால் ஆசையால் துன்பம் இடைவிடாமல் உண்டாகுமென்றறிக. இதுபோலவே ஆசையை யொழிக்கின்,

"இன்பமிடையறா தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங்கெடின்" என்றார்.

அதாவது, ஆசையென்று சொல்லப்படும் துன்பம் ஒருவனிடத்து இல்லா தொழியுமாயின், மோக்ஷ உலகத்திலு மல்லாது உடம்போடிருக்கும் இந்த உலகத்தும் இன்பமானது இடையறாதிருக்கு மென்பதாம்.

திருமந்திரம் என்னும் அரிய பெரிய நூலை நமக்குக் கொடுத்தருளிய மகான் திருமூலர்,

"ஆசையறுமின்கள் ஆசையறுமின்கள்
ஈசனோடாயினும் ஆசையறுமின்கள்
ஆசைப்படப் பட வாய்வருந்துன்பங்கள்
ஆசை விடவிட வாநந்தமாமே" என்று

அதில் கூறியுள்ளதை நோக்கின், நம்மைப் படைத்தருளிய ஈசனிடத்தும் ஆசையை ஒழித்துவிட வேண்டுமெனப்படுகிறது. இந்த ஆசையை முற்றுந் துறந்தவர்களுக்கே முத்திநலம் கிடைக்கும். ஆசையிருக்கிற வரையில் பிறப்பு இறப்புண்டு.

அநேகர் தாம் சாகுந்தருணத்திலும் தங்கள் மக்கள் மனை வீடு வாசல்களைப் பார்த்து மலர மலர விழித்து அவர்களை விட்டுப்போகிறோமே என்று கண்ணீர்பெருக்குகிறார்கள். அந்தோ! இக்காலத்தில் இவர்கள் அழுவதால் இவர்களுயிரை எமதர்மன் விட்டுவிடப்போகிறனா? உயிரைப்பற்றி நிச்சயமில்லை யென்பதை அறிந்த பின்பேனும் உலக ஆசையை யொழித்து ஈசுவரனைத் தியானிக்கலாகாதா?

இப்படிப்பட்ட வீண் அபிமானம் இந்த உலகமும் உலகத்துப்பொருளும் அனித்திய மென்பதையறிந்தவர்களுக்கன்றி மற்றவர்களுக் குண்டாகாமலிராது. அப்படிப்பட்ட புத்தியுண்டாவதற்குப் பெரியோர்களுடைய பழக்கமும் அரிய பெரிய நூல்களின் பயிற்சியும் ஆஸ்திக புத்தியும் இளம்வயது முதற்கொண்டு இருந்து வரவேண்டும். இது நிற்க, மொத்தத்தில் ஆசை பொல்லாதென்பது உண்மையே. மேன்மேலும் விரும்பும் துராசையை எவ்விதத்திலும் அகற்றவேண்டும்.

புத்திமானே பலவான்.

ஓர் காட்டில் அனேகம் மிருகங்கள் உலாவித்திரிந்து கொண்டிருந்தன. ஒருநாள் மத்தியானம் 15-நாழிகைக்கு தாகத்தால் பீடிக்கப்பட்டு ஓர் கஜசிரேஷ்டமானது உலாவித் திரிந்து கொண்டு வரும்பொழுது அதன் எதிரில் ஒரு குளம் அழகியதாகவும் தண்ணீர் நிறைந்துள்ளதாகவும் தென்பட்டது. இதைப் பார்த்து மிகுந்த ஆவலுடன் அதிவிரைவாகத் தண்ணீர் அருந்த

படிக்கட்டில் இறங்கும்பொழுது குளத்தின் பக்கத்துக் கரையில் தன் எதிரே வரும் சிங்கத்தைப்பார்த்து ஓலவென்று ஓரே கூச்சலாய்க் கதறிற்று. அக்குளக்கரையின் அருகே உள்ள கருவேலன் மரத்தில் ஏறி அதன் தழையைத் தின்றுகொண்டிருந்த ஒரு ஆட்டுக்குட்டியானது கதறுகிற யானையைப்பார்த்து "ஓகஜ சிரேஷ்டா! ஏன் கதறுகிறாய்? உனக்கு என்ன ஆபத்து வந்தது" என்று கேட்டது. யானையானது ஆட்டுக்குட்டி சொல்லும் வார்த்தையைக்கேட்டு திரும்பிப்பார்த்து "ஓ ஆட்டுக்குட்டியே! நீ ஏன் வீணாக என்னைக் கூப்பிடுகிறாய்: இன்னும் ஒரு நிமிஷத்திற்குள் நீயும் நானும் உயிர் துறக்கவேண்டியதுதான். அதோ வந்துவிட்டது சிங்கம்" என்று கோவெனக் கத்திற்று. இதைக்கேட்ட ஆட்டுக்குட்டியானது நகைத்து "நீ பயப்படவேண்டாம். அந்த இடத்திலேயே படுத்துக்கொள். இதோ வருகிறேன்" என்று சொல்லி கருவேலன் மரத்தினின்றும் ஓரே துள்ளாய்த் துள்ளிக் குதித்து யானையின் தலைமேல் ஏறிக்கொண்டு காலைக்குந்திட்டு உட்கார்ந்து தன் கழுத்தின் கீழ்ப்புறம் விரல்போல் தொங்கும் இரண்டையும் முன்காலால் துருக்கர்கள் தாடியை உருவுவதுபோல் தடவிக்கொண்டு தலையை அசைத்து அட்டகாஸம் செய்துகொண்டு எதிரே வரும் சிங்கத்தைப் பார்த்து "ஓ சிங்கமே! சீக்கிரம் வருவாயாக. நான் ஒருநாளைக்கு, ஒரு யானையும் ஒரு சிங்கமும் சாப்பிடுவது வழக்கம். இன்று காலைமுதல் காத்திருந்தும் யானைமாத்திரம்தான் அகப்பட்டது, சிங்கம் அகப்படாமல் வெகு நேரமாய்க் காத்துக்கொண்டிருக்கிறேன். சீக்கிரம் வருவாயாக" என்றது. ஆட்டுக்குட்டி அட்டகாஸத்துடன் யானைமேல் உட்கார்ந்திருப்பதையும் இது சொல்லும் வார்த்தையையும் சீக்கிரம் வாவென்று அழைப்பதையும் எதிர் நோக்கிப்பார்த்த சிங்கமானது நாம் அங்கு போனால் கட்டாயம் தின்றுவிடுமென்பதில் ஸந்தேகமில்லை. ஆகையால் நாம் எவ்விதமாவது உயிர் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு "ஓ ஆட்டுக்குட்டியே இதோ வருகிறேன் இதோ வருகிறேன்" என்று

சொல்லிக்கொண்டு பின்னடையாகச் சிலதூரம் நகர்ந்து எங்கே ஆட்டுக்குட்டி வந்துவிடுமோ என்ற பயத்தால் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓட ஆரம்பித்து விட்டது.

சிங்கம் தன் வார்த்தைக்குப் பயந்து ஓடுவதைக் கண்ட ஆட்டுக்குட்டி, "ஓ யானையே! நான் என் புத்தி நுட்பத்தால் சிங்கத்தைத் துரத்திவிட்டேன். நீ தண்ணீர் குடித்துவிட்டுப் பயமன்றி இஷ்டம்போல் செல்வாய். ஆயினும் ஈச்வரன் இவ்வளவு பெரிய சரீரத்தைக் கொடுத்து அதற்குத் தகுந்த புத்தியைக் கொடுக்கவில்லையே என்று மிகவும் வருந்துகிறேன்," என்று சொல்லி மறுபடியும் கருவேலன் மரத்தின்மேலேறித் தழைமேய ஆரம்பித்தது.

அக்காட்டின் புதருக்குள் பதுங்கியிருந்த ஓர் நரியானது ஓடிவரும் சிங்கத்தைப் பார்த்து "ஓ சிநேகிதனே! நீ ஓடி வருவதைப் பார்த்தால், மிகுந்த பயத்துடன் வருவதாகத் தெரிகிறது. நில் நில். ஓடவேண்டாம்; என்ன விஷயம் என்னிடம் சொல்" என்று வினவிற்று.

இதைக்கேட்ட சிங்கமானது; "நான் நிற்க முடியாது. வந்துவிடும் ஆட்டுக்குட்டி" என்று ஓடிக்கொண்டே இருந்தது. நண்ப! ஓடவேண்டாம் ஆட்டுக்குட்டியாவது வரவாவது நீ பயப்படவேண்டாம். நின்று என்னிடம் உன் விஷயத்தைச் சொல். உனக்கு உபகாரம் செய்கிறேன்" என்றது நரி. நடந்த விஷயத்தை மனதில் சிறிது அச்சத்துடன் நின்று சொல்லத் தொடங்கிற்று சிங்கம்.

ஓ நண்பனே! இன்று வழக்கம்போல் நாம் குளத்திற்குத் தாகம் தீர்த்துக்கொள்ளப் போகும் சமயத்தில் அக்குளத்தின் கரையில் ஓர் ஆட்டுக்குட்டியானது ஒரு யானையைப் படுக்கவைத்து அதன் மேல் உட்கார்ந்துகொண்டு அட்டகாசத்துடன் நான் தினம் ஒரு யானையும் ஒரு சிங்கமும் சாப்பிடுவது வழக்கம். இன்று யானை மட்டும் தான் கிடைத்தது. "வெகு நாழியாக உன் வரவை எதிர் பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறேன். சீக்கிரம் வா, சீக்கிரம்

வா" என்று மிகவும் அவசரத்துடன் அழைத்தது. நான் மெதுவாகத் தப்பித்து வந்துவிட்டேன். இவிடத்தில் நிற்கக்கூடாது. ஒரு சமயம் தேடி வந்தாலும் வந்து விடுமென்று சொல்லி ஓட ஆரம்பித்தது.

இதைக்கேட்ட நரியானது சிரித்துப்பரிகாஸம்செய்து "ஓ சிங்கமே! நீ ஏமாந்து விட்டாய்? உன்னை அந்த ஆட்டுக் குட்டியானது தன் சமத்கார வார்த்தையால் தூக்கிவிட்டது. அவ்வார்த்தையில் நீயும் பயமடைந்து விட்டாய்; இப்பொழுதே அந்த ஆட்டுக் குட்டியை நான் இரையாக்கிக்கொண்டு உனக்கு அந்த யானையை இரையாகத் தருகிறேன்; சீக்கிரம் போவோம் வா" என்றது.

சிங்கமானது "நான் வரமாட்டேன். நீ வேண்டுமானால் போ. அந்த ஆட்டுக்குட்டி எங்கள் இரண்டுபேரையும் ஆகாரமாகவும் உன்னை அதற்குச் சட்னியாகவும் ஸரிப்படுத்தி விடும். நீ என்னை ஏய்க்க முடியாது; நான் வரவே மாட்டேன்" என்று ஒரேபிடியாய்ச் சொல்லிவிட்டது.

இதற்கு நரி என்ன செய்பலாமென யோசித்து "நண்ப! நீ மிருகங்களுக்கெல்லாம் இராஜாவாக இருந்து அற்பமான ஆட்டுக் குட்டிக்குப் பயந்து ஓடிவதைப் பார்த்தால் கேவலம் உன்னைப் போல் தாழ்ந்தவர்கள் எவருமே கிடையாது உன் ஜாதியார் உன்னைச் சேர்க்கமாட்டார்கள். ஆகையால் என்னுடன் வந்தால் அந்த யானையை இரையாக்கித் தருகிறேன் பயப்படாதே" என்று சொல்லிற்று. இது எவ்வளவு சொல்லியும் சிங்கமானது வருவதாக ஒப்புக்கொள்ளவில்லை. நரியானது தன் தந்திரத்தால் பக்கத்துச் செடிகளில் படர்ந்திருந்த ஒரு கொடிகளை யெடுத்து சிங்கத்தின் கழுத்தில் கட்டி தன் கையில் பிடித்து இழுத்துக்கொண்டு நல்வார்த்தைகள் சொல்லிக்கொண்டே அக்குளக்கரைக்குச் சமீபம் வந்துகொண்டிருந்தது.

ஆட்டுக்குட்டி இறங்கிப் போனவுடன் யானையானது நாம் இன்று இந்த ஆட்டுக்குட்டியால் தப்பிப் பிழைத்தோம் என்று அக்குளத்தில் தண்ணீர் சாப்பிட்டுவிட்டுத் திரும்பிக் கரையேறும் சமயத்தில்முன் சிங்கத்தைக் கண்டபடிக் கட்டுக்குவந்தவுடன்முன ஞாபகம்வரத் திரும்பிப் பார்த்தது. உடனே தன் சரீரம் முழுவதும் நடுங்க மூன்விட அதிகமாக உரத்துக்கூச்சலிட்டது. மரத்தில் இருந்த ஆட்டுக்குட்டி ஏன் கூச்சலிடுகிறாய் என்றதும் உனக்கும் எனக்கும் சேர்ந்தாப்போல் சனியன் பிடித்துவிட்டது. அதற்

காகத்தான் கத்துகிறேன். இதோபார் எதிரே ஒரு நரியானது அச்சிங்கத்தைக் கட்டி இழுத்துக்கொண்டு வருகிறது. இனி தப்பமுடியாது. நீ நரிக்கு இரையாக வேண்டியது தான். உன் பாச்சா அந்தக் குள்ள நரியினிடம் பலிக்காது. அது வெகு தந்திரசாலி என்றது.

இதைக்கேட்டு ஆட்டுக்குட்டி சிரித்துக்கொண்டு "நீபயப்பட வேண்டாம். அந்த இடத்திலேயே படுத்துக்கொள்; இதோ வருகிறேன்" என்று ஒரே குதியாய்க் குதித்து முன்போல் யானையின் தலையின்மேல் உட்கார்ந்துகொண்டு முன்விடப்பதின்மடங்கு அதிகமாய் அட்டகாசம் செய்துகொண்டு தாடியை உருவித்தலையை அசைத்து எதிரில் வரும் நரியைப்பார்த்து "ஓ நரியே! உன்னை சிங்கத்தைத் தேடிக்கொண்டு வரச்சொல்லி ஆஞ்ஞாபித்து எத்தனை நாழிகையாயிற்று; ஏன் இவ்வளவுநாழிகை. சீக்கிரம் கொண்டுவா. வெகு பசியாக இருக்கிறது. வேகமாய் இழுத்துவா" என்று ஆடம்பரம் செய்துகொண்டிருந்தது. ஆட்டுக்குட்டி முன்போல் உட்கார்ந்திருப்பதையும் அது சொல்லும் வார்த்தையையும் கேட்டு சிங்கமானது இன்று நம்மை வஞ்சித்து ஆட்டுக்குட்டிக்கு இரையாக்கி விட்டுத்தான் தப்ப வழி தேடுகிறது. இதன் தந்திரத்தைப் பார்த்தாயா என்று மனதில் நிச்சயித்து பின்பக்கம் திரும்பி ஒரே ஓட்டமாய் நரியையும் சேர்த்து இழுத்துக்கொண்டு ஓட ஆரம்பித்தது. நரியானது ஆட்டுக்குட்டியின் தந்திரத்தை அறிந்து சிங்கத்தை விடாமல் நல்வார்த்தை சொல்லி இழுத்துப் பிடிக்கவே சிங்கம் தன் பலன் கொண்டு இழுக்க நரி ஓணங்கொடியை விடாமல் பிடித்திருந்தமையால் கூடவே இழுக்கப்பட்டு கல்லிலும் முள்ளிலும் பொள தேக முழுவதும் காயமாகி ஓணங்கொடி அறுபட்டு ஓர் பெரும் புதரில்விழுந்து உயிர் துறந்தது. சிங்கம் இன்று தப்பிப் பிழைத்தோமென்று ஒரே ஓட்டமாய்க் கண் காணமல் ஓடி ஒளிந்துகொண்டது. ஆட்டுக்குட்டி யானையைப் பார்த்து "புத்தி உள்ளவன் பிழைப்பான்" என்று சொல்லிப் போய் விட்டது.

நண்பர்களே! இச்சிறு கதையால் அறியக்கூடியது யாதெனில் புத்தியை மேன்மேலும் விருத்திசெய்து சமயத்துக்குத் தக்கபடி உபயோகித்துத் தம் வாழ் நாளைக்கழிப்பதுமேன்மை எனக் கருதிக் கெட்டவழியில் புத்தியைச் செல்லவிடாமல் தடுத்து சுகமாக வாழலாமென்பதை அறிவிக்க இக்கதை எழுதலானேன்.

T. K. S,.

வேனிற்கால வருகை.

இப்பொழுது வசந்தகாலம் குன்றி, வேனிற்பருவம் விரைந்து வருவது நாம் யாவரும் அறிந்தவிஷயமே. கோடைக்காலத்தின் கொடுமையை என்னென்றுரைப்பது! சமநிலங்களில் வசிக்கும் மனிதர்கள் படுந்துயரத்தை அளவிடலரிது. அந்தோ! கோடைக்காலம் என்று சொல்லும்பொழுதே தேகத்தளர்ச்சியும், வியர்வையும், நித்திரையில்லா நிசிகளும் நமது மனதின்கண் உதிக்கின்றன. ஆனால் நிகழும் வசந்தகாலமோ மன்மதனுக்குரிய காலமென்பர். ஆனதுபற்றியே மன்மதனுக்கு "வேனிலான்" என்று ஒருபெயர் வழங்கும். வசந்தகாலத்தில் சோலைகளும், புஷ்பவனங்களும் ரமணீயமாய் விளங்கும். குயில் அன்னம் அன்றில் முதலியன மந்தகாசத்துடன் பூஞ்சோலைகளில் உலாவித்திரியும். பாரிஜாதம், மந்தாரம், சண்பகம், முல்லை முதலான உயர்ந்த புஷ்பஜாதிகளெல்லாம் நிகரற்ற வாசனையை எங்கும் பரவச்செய்து மன்மதனது வரவைச் சந்தோஷத்துடன் ஏற்பதுபோல் மலர்ந்து பிரகாசிக்கும். மன்மதனது முபஞ்சபாலாகும் இன்பவிளையாட்டுக்கள் நிகழ்தற்கிடமான பசுமையான குளிர்ந்த சோலைகளிலெல்லாம் மலர்ந்துள்ள பற்பல புஷ்பங்களிலிருக்கும் தேனைக் குடிக்கும்பொருட்டு, தென்றலின்பின் ஒன்றுசேர்ந்து ஓடும் வண்டினம், மன்மதனின் வில்லிற்குச்செய்த அழகிய நாண்கயிற்றைப்போல விளங்கும், மைந்தரும் மகளிரும் காதல்கொண்டு சோலைகளினிடையே சென்றுலாவி இன்பசுகங்களைப் பெறுதற்கேற்ற காலமும் அதுவே. ஆகவே இளவேனிற் பருவமாகிய வசந்த காலத்திற்கும், முதுவேனிற் பருவமாகிய கோடைக் காலத்திற்குமுள்ள வித்தியாசம் புலப்படும்.

குளிர்ச்சியான சீதோஷ்ண ஸ்திதி மனிதனுடைய புத்தி நுட்பத்தையும் விவேகத்தையும் அதிகரிக்குமென்றும், எவ்வித கஷ்ட

மான வேலையையும் எளிதிற்செய்து முடிக்கும் திறமை அவனிடம் அமையுமென்றும், வெப்பம் அதிகரித்தால் மனிதன் மேனி சோர்ந்து, அங்கம் தளர்ந்து கடினமான காரியங்களைச் செய்யவல்ல சக்தியை இழப்பானென்றும், நாம் பன்முறைபடித்தும் கேட்டுமிருக்கிறோம். இவ்வித அபிப்பிராயம் பெரும்பாலும் உண்மையே யாயினும் முற்றிலும் சரியன்று.

சரீரத்தில் மிதமான உஷ்ணமில்லாமல் நாம் ஒரு வேலையும் செய்யமுடியாது. நிற்க, பகற்காலத்தில் யாதொரு வேலையும் செய்யமுடியாமலும், இரவிலும் ஒருமணி நேரத்திற்காவது தூக்கத்திற் கிடமில்லாமலும், எவ்வேலை செய்யப்புகினும் கஷ்டத்தையே அனுபவித்தும் எக்காரியமும் இப்பொழுது முடித்தலரிது என்று மனத்தளர்ச்சியடையுங் காலத்திலும் 'விதிப்பயனிவை' எனக்கருதி அவ்விடையூறுகளைப் போக்க யாதொரு உபாயத்தையும் தேடாமல், மனதைத் தேற்றியிருத்தல் சாந்தகுணமுடையோருக்கே சாத்தியம்! ஆனால் "வலியுளோர்க்கே வாழ்நாள்", என்பதின் உண்மையை அறிந்து, மேனாட்டாரின் சுகானுபாவங்களையும், அவற்றையடையும் சாதனங்களையும் நாம் கற்றுக்கொண்டே வருகிறோம். 'ஊக்கமது கைவிடேல்' என்பதை மேற்கொண்டு ஒவ்வொரு நிமிஷத்திலும் நம்மாலியன்றளவில் முயற்சி செய்துகொண்டே வரவேண்டும். தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதியையும் கவனியாமல் உழைப்பவருக்கே நாளடைவில் ஜெயம் கைகூடும். ஆகையால் கோடைக்காலம் நெருங்கிவிட்டதென்றெண்ணி மனம் சோர்ந்து முயற்சியைக் கைவிடுதல் தகுதியன்று. விடா முயற்சியால் வெப்பத்தை வென்று, சமநிலவாசிகளும் தமது காலத்தை வீணாக்காமல் நல்லவழியிற் செலுத்துவதே தேசநன்மையைப் பெருக்கும்.

உஷ்ணம் அதிகமாயிருந்தால் வேலை செய்வது கடினம். புத்தியுட்பத்தால் செய்யவேண்டிய வேலைகளைக் குளிர்ச்சியான பிரதேசங்களில் செய்துமுடித்தல் எளிது. இக்காரணம் பற்றியே இராஜாங்

கத்தாரும் வேனிற்காலத்தில் பீடபூமியாகிய மலைப்பிரதேசங்களுக்கு வருஷந்தோறும் போகிறார்கள். சீதோஷ்ண ஸ்திதியைக் கருதியே, தாத்தா (Tata) என்பவரால் ஏற்படுத்தப்பட்ட தொழிலாராய்ச்சி சாலையும் பங்களூரில் ஸ்தாபனம் பெற்றது.

தண்ணீரை வேனிற்காலத்தில் அதிகமாகக் குடிக்கும் வழக்கம் இயற்கையிலேயே அமைந்துள்ளது. ஜலபானமே கூடாது என்று மறுப்பது சரியல்ல. தேகத்தினின்றும் பற்பலவிதமாக வெளியாகும் நீரின் அளவிற்கேற்ற சுத்தஜலத்தை நாம் மறுபடியும் உட்கொள்ளுதல் அவசியமே. ஆனால் அபரிமிதமாய் உணவுடன் ஜலத்தைக் குடித்தல் சரீர சுகத்திற்குத் தீங்கை விளைவிக்கும். முக்கியமாய் இரைப்பையின் ஜீரணசக்தி குறைவுபடும். உடனே பற்பல வியாதிகள் சரீரத்தைப் பீடிக்கும். ஆகையால் சாப்பிடும் பொழுது ஜலபானம் பண்ணாமலிருப்பதே நலம். உணவு உட்கொள்ளுவதற்கான குறிப்பிட்ட நேரங்களுக்குக் கிடையே தண்ணீர் குடிப்பது நன்று.

சோடா, லெம்னெட் முதலிய பானங்கள் நமது நாட்டில் நாளுக்கு நாள் பரவிவருவது ஆச்சரியிக்கத் தக்கதே. வருணாசிரம தர்மங்களும் இவ்வழக்கத்தினால் மறக்கப்பெற்றன! மிதமாய்ச் சாப்பிட்டால் இவை தேகத்திற்கு உற்சாகத்தைத் தரக்கூடியவையே. அளவிற்கு மிஞ்சினால் அஜீரணத்தை உண்டுபண்ணுகின்றன. தவிர, இவற்றில் அடைத்திருக்கும் காற்று ஜீரணசக்தியைக் குறைக்கும் தன்மையுடையது. நல்ல எலுமிச்சம்பழத்தின் ரசத்தை சுத்தமான நீரில் கலந்து சர்க்கரையுடன் சேர்த்துப் பானம் பண்ணினால் தேகாரோக்கியத்தைக் கொடுக்கும். எலுமிச்சஞ்சாறு, ஜீரணசக்தியை அதிகரிக்கும் குணமுடையது. நன்றாய்க் காய்ச்சியபின் தண்ணீரை உபயோகிப்பதே எப்பொழுதும் நல்லது. ஜலதோஷமும் வராது.

கோடைக்காலத்தில், வெண்ணெய் நெய்முதலிய கொழுப்பைக்

கொடுக்கும் உணவுகளை மிதமாக உபயோகித்தலே நன்று. ஏனெனில், தேகத்தில் கொழுப்பு சேர்ந்தால் உஷ்ணம் அதிகரிக்கும். பற்பல பழவகைகளே கோடைக்கேற்ற உணவுகள். பகலில் தேகப் பயிற்சி செய்வதரிதாகையால், இரவில் மிதமான போஜனம் செய்ய வேண்டும். தேகாரோக்கியத்திற்கு என்றும் கெடுதியையே விளைவிக்கும் சாராயம், புகையிலை, முதலான லாகிரி வஸ்துக்களை உபயோகிப்பதினின்றும் விலக்கவேண்டும்.

வேனிற்காலத்திலும் தேகப்பயிற்சியை முற்றிலும் கைவிடாமல் பகற்பொழுதில், குளிர்ந்த வேளைகளில் சிறிது நேரமாயினும் செய்துகொண்டு வரவேண்டும். களைப்படையுமாறு அதிகமாகச் செய்தலும் சரீரத்திற்குக் கெடுதியை உண்டுபண்ணும். மிகவும் குளிர்ந்த ஜலத்திலாவது அல்லது உஷ்ணம் அதிகமாயுள்ள நீரிலாவது ஸ்நானம் செய்வதைப் பார்க்கிலும், இளஞ்சூடாயுள்ள ஜலத்தை ஸ்நானத்திற்கு உபயோகப்படுத்துவது உத்தமம்.

சௌகரியப் படுமானால் பீடபூமியாக மலைப்பிரதேசங்களுக்குச்சென்று, ஒருமாத காலமாவது அங்குவசித்தால் அளவிலா நன்மை யடையலாம்.

வி. பி. ராமசுப்பையர், பி. ஏ.

அர்ச்சுனனுக்கு அனுமார் துவஜமான விவரம்.

(ஆனந்த ராமாயணம்.)

ஒரு சமயத்தில் அர்ச்சுனன் கிருஷ்ணனின்றித் தேரின் மீதேறிக் கொண்டு தென்றிசையிலுள்ள ஓர்பெரிய ஆரணியத்தில்

வேட்டைக்காகச் சென்றான். தான் ஒருவனைச் சாரதியிருக்குமிடத்தில் உட்கார்ந்து தேரைச்செலுத்திக்கொண்டு பாணங்களால் மிருகங்களை அடித்துவரும்போது அன்றுபகலில் ஸ்னானஞ்செய்ய எண்ணி இராமேசுவரம் சென்று ஸேதுவில் ஸ்னானஞ்செய்து மாத்தியான்னிகம் முதலிய கருமங்களை முடித்துக்கொண்டு மறுபடி தேரின் மீதேறிக்கொண்டு சமுத்திரக்கரையில் கொஞ்சம் கருவத்துடன் சஞ்சரித்தான். இச்சமயத்தில் அரண்யத்தில் பர்வதத்தின்மேல் சாமானியக்கபிபோல் வேடம்பூண்டு இராமராமா என்று ஜபம் செய்துகொண்டு பிங்கள வர்ணமுள்ள ரோமங்களுடன் உட்கார்ந்திருக்கும்மங்களசொரூபாகிய அனுமானைக்கண்டு அர்ச்சுனன் "ஏ குரங்கே! உன் பெயர்என்ன!" வென்று வினவினான்.

இவ்விதம் அர்ச்சுனன் கேட்டதும் அனுமான் மந்தஹாஸம் செய்து ஸ்ரீராமச்சந்திர பிரபு நூறுயோசனைதூரம் சமுத்திரத்தில் கற்களால் அணைகட்டியது எவனுடைய பிரதாபத்தாலோ அவன்தான் நான். என்பெயர் அனுமான். வாயுவின் குமாரன் என்று பதிற்கூறினான்.

இப்படிக் கருவத்துடன் கூறின வார்த்தையைக் கேட்ட அர்ச்சுனன் தானும் கருவத்துடன் சிரித்து முன்னால் நிற்கும் அனுமானை நோக்கி, "முந்தி இராமன் கடலில் அணைகட்டியது வீண்சிரமம். இராமன் தன்பாணங்களாலேயே அணைகட்டி ஏன்காரியசித்தியடைந்திருக்கலாகாது" என்றான்.

உடனே! அனுமான், "அர்ச்சுன! என்னைப்போன்ற கவிகளின் பாரத்தினால் சரஸேதுவானது சமுத்திரத்தில் அமிழ்ந்துவிடுமென்றெண்ணி இரகுநந்தனன் அங்ஙனம் அணைகட்டவில்லை" என்றான்.

அர்ச்சுனன் அனுமான் கூறியதைக் கேட்டு "ஆஞ்சனேய வானரசிரேஷ்டனே! கபிகளின்பாரத்தினால் சரஸேது சமுத்திரத்

தில் அமிழ்ந்துபோவதானால் வில்லாளியின் வில்வித்தைக்கு மகிமை என்னவிருக்கிறது. நான் உனக்கு முன்னால் இப்போது சரசேதுவைக் கட்டுகிறேன்; நீ அதன்மேல் நர்த்தனம் முதலிய வற்றை உன்னிஷ்டம்போல்செய்; பிறகு என்வில்வித்தையைப் பார்'' என்றுரைத்தான். அனுமான் புன்னகைகொண்டு அர்ச்சுனா! என்கால் கட்டைவிரல் பட்டவுடன் நீ கட்டும் சரஸேது சமுத்திரத்தில் முழுகிவிட்டால், நீ என்ன செய்கிறாய்'' சொல்லென்றார்.

அர்ச்சுனன்! "ஆஞ்சனேய! உன்பாரத்தினால் என் சரஸேது ஜலத்தில் முழுகிவிட்டால், இவ்விடமே அக்னிப்பிரவேசம் செய்து விடுகிறேன். இது சத்தியம் முழுகச் செய்யாவிடில் நீ என்ன செய்கிறாய்? உன் பந்தயத்தைத் தெரிவி'' என்றான்.

அனுமான் அர்ச்சுனன் செய்த பிரதிஞ்ஞையைக் கேட்டு, அர்ச்சுனா! உன் சரஸேதுவை நான் என்கால் கட்டைவிரலால் சமுத்திரத்தில் முழுகும்படி செய்யாவிடில் உன்னுடைய இரதத்தின் துவஜத்திலிருந்து உனக்குச் சேய்கிறே'' னென்றான். அர்ச்சுனன் சரி அவ்விதமே யாகட்டும் என்றுரைத்து, மஹத்தான வில்லை எடுத்து டணா! என்றோசையிடச்செய்து பாணங்களைப் பிரயோகித்து, நெருக்கமாகவும் கெட்டியாகவும் ஓர் ஸேதுவைக் கட்டினான்.

அனுமான் உடனே சமுத்திரத்திற்கு மேல் நூறுயோஜனை தூரம் உள்ள சரஸேதுவைப்பார்த்து, அர்ச்சுனன் கண் முன்பாகவே ஓர் கணநேரத்தில் தமது கால் கட்டை விரலால் சமுத்திரத்தில் முழுகும்படி செய்தார். அப்பொழுது தேவர்கள் கந்தருவர்கள், கின்னரர்கள், உரகர்கள், அரக்கர்கள், வித்தியாதரர்கள், அப்சரஸ்திரீகள், ஸித்தர்கள் எல்லோரும் ஆகாயமார்க்கத்திலிருந்து புஷ்பமாரி, பொழிந்தார்கள்.

அர்ச்சுனன் இதைப்பார்த்துச் சமுத்திரக்கரையில் சிதையை

அடிக்கித்தேகத்தை விட நிச்சயம் செய்தான். அனுமான் வேண்டாமென்று தடுத்தும் கேட்கவில்லை. இந்தச்சமயத்தில் கிருஷ்ண பகவான் அர்ச்சுனன் மூலமாக சரஸேதுவின் சம்பந்தமாக நடந்த பந்தயம் முதலியவற்றைத் தெரிந்துகொண்டு பிரம்மசாரிவேடத்துடன் எதிர்தோன்றி நீங்களிருவருவம் முன்செய்த காரியம் யாவும் வீண். சாக்ஷியின்றிச் செய்யும்காரியம்பொய்யென்றும் உண்மை என்றும் தெரியவராது. நீங்களிருவரும்இப்போது முன்போல் செய்தால் நான்பார்வையிட்டு உண்மைபொய் என்பதைத் தெரிந்து சொல்லுகிறேன் என்றார். அர்ச்சுனன் அனுமான் இருவரும் பிரம்மசாரியின் சொல்லைக்கேட்டு சரி அவ்விதமே செய்வோம் சம்மதமென்று கூறினார்கள்.

பிறகு காண்டீவம் என்ற தனுசால் முன்போல் சரஸேதுவைக் கட்டினான் அந்தஸேதுவுக்கு மத்தியில் கிருஷ்ணன் சக்கிராயுதத்தை வைத்தார். பிறகு ஆஞ்சனேயர், தமது காற்பெருவிரலால் அச்சேதுவை அழுத்தினார். சேது அசையவில்லை, அது கண்டு பாதங்கள் முழங்கால்கள் கைகள் இவைகளைக் கொண்டு தமதுமுழுபலத்தாலும் அழுத்தினார். அப்படியும் அந்தஸேது அசையவில்லை. அப்பொழுது வானரோத்தமன் ஒன்றும்பேசாமல் மனதில் ஆலோசனை செய்தார். முந்திப்பெருவிரலால் சமுத்திரத்தில் முழுகின சேது, இப்பொழுது கைகால்களால் உதைத்தும் அசையவில்லை. இதற்குக்காரணம் இந்த பிரமசாரியல்ல: ஸ்ரீமன் நாராயணன்தான் நான் கருவமடைந்தமையால் அற்புதமானசெய்கையையுடைய ஸ்ரீகிருஷ்ணன் அதைப்பரிஹாரம் செய்ய வந்திருக்கிறார்.

கிருஷ்ணனுக்கு முன்னிலையில் குரங்கின்பராக்கிரமமெங்கே என்றெண்ணி அர்ச்சுனனை நோக்கிக்கூறுகிறார்.

ஏ அர்ச்சுனா' நீ வென்றாய், அது இந்த பிரமசாரியின் உதவி

யாலேயே. இவர் பிரம்மசாரியல்ல. ஸேதுவில் சக்கிரத்தைப் பிரவேசிக்கச்செய்த கிருஷ்ணன். உன் உதவிக்காக வந்தவரென்று நானறிந்தேன். இது உண்மை. இவர் திரேதாயுகத்தில் இராமராக இருக்கும்போது எனக்கு துவாபரயுகத்தில் கிருஷ்ணவேஷத்துடன் தரிசனம் கொடுப்பதாக வாக்களித்திருந்தார். அந்தச் சொல்லை உண்மையாக்குவதற்கு உன் ஸேதுவைக் காரணமாகக் கொண்டு வந்திருக்கிறார் என்று அர்ச்சுனனிடம் அனுமான் பேசிக் கொண்டிருக்கும்போதே பகவான் பிரமசாரிவேடத்தைவிட்டுக் கிருஷ்ணரூபத்துடன் தரிசனம் கொடுத்தார். ஆஞ்சனேயன் பீதாம்பரதானும் நீலமேகவர்ணனுமாகிய கிருஷ்ணனைப்பார்த்து புளகாங்கிதமுற்று, வணங்கினர். கிருஷ்ணன் மாருதாத்தமசனை ஆலிங்கனம் செய்துகொண்டார். மாருதாத்தமசன் தன்னை கிருதகிருத்தியனுகக் கருதிச் சந்தோஷித்தான். பிறகு ஸ்ரீகிருஷ்ணனுடைய உத்தரவினுல் சக்கரம் இருப்பிடம்சென்றது. சமுத்திரத்தின் அலைகளால் சரசேதுவுங்கலைந்து போய்விட்டது. அப்போது அர்ச்சுனன் ஸ்ரீகிருஷ்ணனுல் பிழைத்தோமென்றெண்ணிக் கர்வமடங்கினன். கிருஷ்ணன் அப்போது அர்ச்சுனனைப்பார்த்து "நீ இராமரைத்தூஷித்தாய், அதனுல் அனுமான் உன் வில்வித்தையைப் பொய்யாக்கினர்" என்றன்.

"ஏ ஆஞ்சநேய! நீ எவன் பிரதாபத்தால் இராமர் கடலில் அணைகட்டினரோவென்று இராமரைத்தாழ்த்திப் பேசியதால் அர்ச்சுனனுல் சபிக்கப்பட்டாய். இனி கருவமில்லாமல் எப்போதும் என்னை பஜனம் செய்" என்று மாருதிக்குச்சொல்லி அர்ச்சுனனுடன் அவன் பட்டணம் சென்றர். ஆகையால் அர்ச்சுனன் கபித்துவஜமுடையவனென்று எல்லோரும் கூறுகிறர்கள்.

ரங்கநாயகி.

(219. பக்கம் தொடர்ச்சி)

ரங்கநாயகி ராஜ பிரதிநிதி அங்குதனைக் கண்டு பேசிவிட்டு சன்னியாசி வேடம் பூண்ட அரசனின் வேண்டுகோளுக்கிணங்கி, மங்களம் வீடு சேர்ந்தபொழுது, "சுசீலமாய் சந்தித்தோம், சரியான சமயம்; சாத்மீக அங்குதன் யாதுரைத்தான்," என்று வினவ, அவள் அலுவல் எவ்வாறு நடக்கப் போகிறதென்பதைப் பற்றி உரைத்தான்.

ரங்கநாயகி:—"செங்கற் சுவர்களால் சூழப்பட்ட அவன் தோட்டக்காலினோர் பக்கத்திலிருக்கும் எலுமிச்சைத் தோட்டத் தண்டையில் கதவொன்றுண்டு,"—சன்னியாசிக்கும், மங்களாவிற்கும் அங்குதனால் கொடுக்கப்பட்ட இரண்டு திறவுகோல்களைக் காட்டி—, "இந்தப் பெரிய சாவி எலுமிச்சைத் தோட்டக் கதவைத் திறக்கிறது. இச்சிறியது, இத்தோட்டத்தினின்றும், நந்தவனத்துக் கதவைத் திறக்கும். நான் நடுராத்திரியில் அவரையங்கு சந்திப்பதாகச் சொல்ல, என் தமையனை மன்னித்து விடுவதாக வாக்களித்திருக்கிறார். ஏற்ற எச்சரிக்கைகளை நான் அறியும்பொருட்டு பிரதிநிதி, குற்றமுள்ளோருடைய ஜாக்கிரதையுடன் இரண்டு தடவை எனக்கு வழியைக் காட்டினார்."

சன்னியாசி:—"நீ யாதாகிலும் அடையாளக் குறிப்பு காட்ட உடன்படவில்லையா? அப்படிக்கிருந்தால் அதை மங்களா அறிய வேண்டும்."

ரங்க:—"இல்லை, ஒன்றுமில்லை. நடுராத்திரியில் போக வேண்டியதுதான். நான் சிறிதுநேரந்தான் அங்கிருக்கக்கூடுமென்றும் சொன்னேன்; ஏனெனில், (என் தமயன் நிமித்தமாகத்தான்

அங்கு வருவதாயறிந்த) பணிவிடைக்காரி பொருத்தி என்னுடன் வருவதாகச் சொல்லியிருக்கிருள்."

இவ்வளவு சூக்ஷ்ம ஆராய்வுடன் நடப்பிக்க ஒத்துக்கொண்ட ரங்கநாயகியைச் சந்நியாசி வியந்தான். அவன் மங்களத்தை நோக்கி, "மாதே, அங்குதனிடம் நீ அதிகம் புகல வேண்டிய தில்லை; நீ திரும்பி வரும்பொழுது, துக்கமுள்ள மனதில் 'என் தமையனை ஞாபகத்தில் வைக்கவும்' என்று சொல்ல வேண்டியது தான்" எனக் கூறினுன்.

இவ்வழியில் தன் கீர்த்தியை யிழக்காமல் தமையன் உயிரைக் காப்பாற்றி சந்தோஷத்தால் பூரித்த ரங்கநாயகி அன்றிரவு, மங்களாவை அங்குதனின் நந்தவனத்திற்குக் கூட்டிப் போனுன். ஆனுல் குணசீலனின் உயிர் இன்னும் அபாயத்தினின்றும் நீங்கப்பட வில்லையென்று நம்பிய சன்னியாசி அன்றிரவு சிறைக்கு வந்தான். வந்தது குணசீலனின் அதிர்ஷ்டந்தான். ஏனெனில் சன்னியாசி வந்ததும், குணசீலன் தலையைத் தரித்து காலை ஐந்து மணிக்குள் அத்தலையுடன் தன்னிடம் வரும்படி உத்தரவு பெற்ற ஓர் அதிபதி அங்குதனிடமிருந்து வரலானுன். ஆனுல், இதைத் தாமதிக்கும்படியும், அன்று மாலையில்தான் பரலோக ப்ராப்தியடைந்த ஒருவன் தலையைக் காட்டி அங்குதனை ஏமாற்றும்படியும் சன்னியாசி வேடம் பூண்டிருந்த அரசன் அவ்வதிபதியை இசையச் செய்தான். (வாஸ்தவத்தில் சன்னியாசி யென்று எல்லோராலும் நம்பப்பட்ட அரசன்) அரசன் கையொப்பத்தை யுடைய ஓர் லிகிதத்தைக் காண்பித்ததின் பேரில், ஊரில்லாத அரசனிடமிருந்து இச்சன்னியாசி யாதோ இரகசியமான உத்தரவுகள் பெற்றதாக, அவ்வதிபதி எண்ணி சன்னியாசி சொல்லியதற்கிணங்கிச் சென்றவனின் தலையைக் கொய்துகொண்டு அங்குதனிடம் சென்றுன்.

பிறகு சன்னியாசி (அரசன்) தன் வாஸ்தவப் பெயரையிட்டு, தான் வழியில் சில அசந்தர்ப்பங்களால் நிறுத்தப்பட்ட படியால்

மறுநாள் காலை நகர் வருவதாகவும்; தான் நகரினுட் பிரவேசிக்கு மிடத்தில் அங்குதன் வந்து இராஜாதிகாரத்தைத் திரும்பி யொப்புவிக்க வேண்டுமென்றும்; அக்கிரமத்தால் வருந்துவோர் அச்சமயத்திலேயே அரசனிடம் நேரில் பிரியாது செய்ய வேண்டு மென்றும் ஊராருக்கு அறிவிக்கும்படியும் இராஜ பிரதிநிதியாகிய அங்குதனுக்குக் கடிதம் வரைந்தான்.

அருணோதயத்தில், ரங்கநாயகி சிறைவந்து, குணசீலன் சிரசு வெட்டுண்டு விட்டதென்று சொல்லுவதே நலமென்று கொண்ட சன்னியாசி யரசனைச் சந்தித்து, அங்குதன் தன் தமை யனை விடுவித்து விடும்படி உத்தரவனுப்பினனு வென்று வினவ "அங்குதன் குணசீலனை இவ்வுலகினின்றும் ஒரே வழியாய்த் தொலைத்து விட்டான். அவன் சிரசும், பிரதிநிதியிடம் அனுப் பப்பட்டிருக்கிறது" என்று உத்தரம் கூற, துன்பமுற்ற தங்கை "ஐயோ! பொல்லாங்குள்ள உலகமே! அதிர்ஷ்டமற்ற குண சீலா!! ரங்கநாயகி!! வசமான அங்குதா!!!" என்று கதறி ணுள்.

சன்னியாசி யரசன் ஆறுதல் கூறி, மறுநாள் காலை அரசன் வருவதையும், அவன் எவ்விதம் அரசனிடம் அங்குதனைக் காட்டி பிரியாது செய்ய வேண்டுமென்றும் சொன்னுன். பிறகு முத வில் அங்குதன் வாக்கே மேலிடும் போலிருந்தாலும் கூட; தைரி யத்துடன் தான் வசனிக்க வேண்டுமென்றும் பகர்ந்தான். ரங்க நாயகியை விட்டபிறகு சன்னியாசி யரசன் மங்களத்தினிடம் சென்று, அவள் அன்று காலையில் அரசன் முன் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்பதை அறிவித்தான்.

இரண்டு அல்லது மூன்றுமணி நேரங்கழித்து அரசன் தன் இராஜரீக உடைகளுடன், சந்தோஷத்தால் பூரிக்கப்பட்ட தன் பிரஜைக் கூட்டத்தின் மத்தியில் தன் நகா நுழைந்து அங்குத னிடமிருந்து இராஜாதிகாரங்களை தக்கபடி ஏற்றுக்கொண்டான். அப்பொழுது ரங்கநாயகி விண்ணப்பதாரியாக வந்து பின் வரு

மாறு முறையிட்டாள். "தர்மப் பிரபுவே, நியாயம் செலுத்துவீராக: குரூரமாய் சிரசாக்கினை செய்யப்பட்ட குணசீலனின் தங்கை நான்; நான் பிரபு அங்குதரிடம் என் தமையன் உயிருக்காக மன்றாடினேன், நான் எப்படி அவன் கால்களில் விழுந்து குணசீலனை மன்னிக்கும்படிக் கேட்டேன் என்பதையும், அவர் என்னை மறுத்தார் என்பதையும், எப்படி நான் பிடிவாதமாய்க் கெஞ்சிக் கேட்டேனென்பதையும் சொல்வது காலசேதமே: ஏனெனில் இதற்கு நெடுநேரமாகும். அதன் இழிவுள்ள முடிவைச் சொல்ல எனக்கே அதிக துக்கமாயும் வெட்கமாயுமிருக்கிறது. அங்குதரின் கள்ளக் காதலைத் தணிக்க நான் உடன் பட்டாலொழிய என் தமையனை மன்னிக்க மாட்டேனென்றார்; நான் இதைப்பற்றி தீர்க்காலோசனை செய்யுமிடத்து, சகோதரத்வத்திற்குரிய அன்பு அதிகரித்ததின் பேரில் நான் ஒழுக்கத்தை மறந்து, அவரிஷ்டத்திற் கிணங்கினேன். ஆயினும் மறுநாள் காலை, வாக்களித்ததை அசட்டை செய்து என் தமையன் தலையைக் கொய்து விட்டார்."

இதை அரசன் நம்பாதது போல் போலி காட்டினன். தமையனை இழந்த துக்கத்தால் அவள் புத்தி பிசகி இவ்வாறு கூறுவதாக அங்குதன் சொன்னன். இத்தருணத்தில் மங்களா முன் வந்து, "பெருந்தன்மை பொருந்திய அரசே, ஆகாயத்தினின்று சூரியன் பிரகாசிப்பதும், உண்மை உச்சரிக்கப்படுவதும், உண்மையில் விவேகம் உண்டென்பதும், விவேகமானது உண்மையில் அடங்கியதென்பதும், மெய்யெப்படியோ அப்படி நான் இவர் (அங்குதனைக் காட்டி) மனைவி; அன்பு மிகுந்த அரசே, ரங்கநாயகி சொல்வதெல்லாம் மெய்யல்ல; ஏனெனில் அவள் அங்குதனிடம் இரவைக் கழித்தது நிஜமல்ல. நான்தான் அங்குதருடன் தோட்டத்தில் இரவைக் கழித்தேன். நான் சொல்வது பொய்மையானல், நான் அடியெடுக்க முடியாமல் கல் பிரதிமைபாகக் கடவேன்," என்ருள். மேலும் தான் சொல்வதை மெய்யென்று

ரூபிக்க சிவாநந்த சுவாமியை சாக்ஷியாகக் காட்டினாள். (அரசன் சன்னியாசி வேடம் பூண்டிருந்தபொழுது இப்பெயர் கொண்டிருந்தான்.)

ரங்கநாயகியும் மங்களாவும் அரசன் சொல்லியபடி நடந்தார்கள். ரங்கநாயகியின் கற்புடைமையை நகரப் பிரஜைகளின் முன் தெளிவாயும் பிரசங்கமாயும் ரூபிக்க வேண்டுமென்று தான் அரசன் இப்படிச் செய்தான். அவர்கள் ஒருவரை யொருவர் மறுத்துப் பேசியது அரசனின் ஏற்பாடென்று அறியாத அங்குதன் இவர்களிப்படிச் சொல்வதினால் தான் தன்மேல் சாட்டிய குற்றத்தை பொய்யென ஐயந்திர ரூபிக்கலாமென்றெண்ணினான். அன்றியும் குற்றமற்றவன்பேரில் குற்றஞ் சாட்டினால் அவன் முகமெப்படி மாறுதல் கொள்ளுமோ அப்படியே காட்டி அங்குதன், "இது வரையிலும் நானிதைப்பற்றி நகைத்துக் கொண்டிருந்தேன்: இனி என்னால் இதைப் பொறுக்க முடியாது; நன்மைமிகுந்த அரசே, வேறொருவர் தூண்டுதலின் மேல்தான் இப்பைத்தியமுற்ற ஸ்திரீகள் இப்படிச் சொல்லுகிறார்கள். அரசே நான் இதைக் கண்டுபிடிக்க நீர் விடை தருவீராக," என்றான்.

"மனப் பூர்த்தியாய், சந்தோஷத்துடன் உத்தரவளிக்கிறேன். மந்திரி ஏகம்பரே, நீரும் அங்குதருடனிருந்து உதவி புரிந்து இத்தீய நடத்தையைக் கண்டுபிடிக்கவும். சிவானந்த சன்னியாசியை யழைத்து வரும்படி ஆளனுப்புகிறேன். சன்னியாசி வந்ததும் நீங்கள் விசாரித்து ஏற்ற தண்டனை யளிக்கும்படி உத்தர வளிக்கிறேன்.

"நான் சற்றுநேரம் அப்புறம் செல்கிறேன். நீங்கள் எங்கு மசையாமல் இப்புறக் கூற்றை நன்கு விளங்கச் செய்து தூண்டுவோரை ஏற்றபடி தண்டியும்" என்று அரசன் சொல்ல, தன்மேல் சாட்டிய குற்றத்தைத் தீர்க்கத் தன்னையே நியாயாதிபதியாயும்,

மத்தியஸ்தனுயும் ஏற்படுத்தியதைப் பற்றி அங்குதன் சந்தோஷமடைந்தான்.

இராஜரீக உடைகளை எறிந்துவிட்டு சன்னியாசி வஸ்திரங்களைத் தரித்து வரச்சென்ற அரசன், சிவாநந்த சுவாமியாக, அங்குதன் ஏகாம்பர் இவர்கள் முன் வந்தான். அங்குதன் பேரில் காரணமின்றி குற்றம் சாட்டப் பட்டதென்று நினைத்த ஏகம்பர், சன்னியாசியைப் பார்த்து, "ஐயா! வாரும்; சரியாய்ப் பதில் சொல்லும்; நீர் இவ்விரண்டு ஸ்திரீகளையும் அங்குதன் பேரில் பழி தூற்றும்படி ஏவினீரா?" என்று வினவ, "அரசன் எங்கே? அவர் தான் என்னை விசாரிக்க வேண்டும்," என்று மறுதலித்தான். "இதை விசாரிக்க அரசர் தான் எங்களை நியமித்தார்; நியாயமாய் பதில் பகரும்," என்று ஏகம்பன் சொன்னதின்பேரில், "தைரியமாய்ச் சொல்வேன்," என்று தடுத்துச் சொன்னுன்.

பிறகு ரங்கநாயகியால் குற்றம் சாட்டப்பட்ட அவனையே நியாயாதிபதியாய் நியமித்ததைப் பற்றி அரசனிடத்தும், தன் நகரில் சிலநாளாக நடந்த துஷ்ட சமாசாரங்களையும், தைரியமாய்ப் பழித்துக் குற்றம் காட்டியபடியால், ஏகம்பர், இராஜாங்கத்திற்கு விரோதமாயும், அரசனைப் பழித்தும் பேசிய குற்றத்திற்காக சன்னியாசியைச் சிறையிலிடும்படி உத்தரவளித்தார். அப்பொழுது, சுற்றுமிருந்தவர் பிரமிக்கவும் அங்குதன் முற்றும் மனக்கலக்க மடையும்படியும் சன்னியாசி வேடம் பூண்டிருந்த அரசன் தன் சுயரூபத்தை யடைந்தான்.

முதலில் அரசன் ரங்கநாயகியை நோக்கி, "ரங்கநாயகியே! சன்னியாசியாயிருந்த உனது நண்பன் உன் அரசனே; என், உடையை மாற்றிய போது மனதையும் மாற்றவில்லை; இன்னும் உன்னை என் புத்திரியாகவே கொண்டிருக்கிறேன்," என்றான்.

"உமது குடியாளாகிய நான் உமக்கு வேலையிட்டுக் கஷ்டப்படுதியதற்காக மன்னிக்கவும்" என்றாள் ரங்கநாயகி. அவளு

டைய நற்குணத்தை முற்றும் பரிசோதிக்க எத்தனித்து தன் தலைமயன் உயிருடனிருப்பதை இன்னமும் அறிவிக்காமல் தான் குணசீலனினுயிரைக் காப்பாற்றுததின் பொருட்டு அவளிடம் தான் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று அரசனுரைத்தான்.

தன் கெட்ட நடத்தைகளை அரசன் இரகசியமாய் கவனித்துக் கொண்டிருந்தான். என்று அங்குதன் அறிந்து, "எவராலும் அஞ்சப்படும் என் அரசே, கண்ணியம் பொருந்திய தாங்கள் கடவுளைப்போல் என் நடத்தைகளைக் கவனித்திருக்க, எவராலுமறிய முடியாதென நான் எண்ணியது இதுவரை நடந்த என் தீய நடத்தைகளை விட அதிக தீயதேயாம். இப்படியிருக்க, தன்மை மிக்க பிரபுவே, என்னை விசாரணை செய்து அவமானத்தை அதிகரிக்க வேண்டாம். நானே என் குற்றங்களை ஒத்துக் கொள்ளுகிறேன்; உடனே உயிரை யிழக்கும்படி தண்டிக்க வேண்டியது தான் என் வேண்டுகோள்." என்றான்.

அரசன் பின் வருமாறு மறுமொழி கூறினான்.

"அங்குதா, உன் குற்றங்கள் நானுவிதமானவைகள். குணசீலன் தலையை யிழந்த அதே யிடத்தில் நீயும் மரண தண்டனையடைய வேண்டுமென்பது தான் எங்கள் கோரிக்கை.

"மங்களா அவனுடைய உடைமைகளுக்கு உன்னை உரியவளாக்குவது மல்லாமல் நீ நன்மை மிகுந்த வேறு கணவனைத் தேடிக்கொள்ளும் பொருட்டு உன்னையும் விதவையாக்குகிறோம்."

இப்படி யரசன் பகர்ந்தபோது. மங்களா, "நற்குண மிகுந்த அரசே, நான் மற்றொன்றுக்கும் மன்றாடவில்லை நன்மை மிக்க வேறு கணவனு மெனக்கு வேண்டாம்" என்று அரசன் கால்களில் விழுந்து, ரங்கநாயகி தனது அன்பு மிக்க தலைமயன் உயிரை கெஞ்சியது போலவே, அன்பு மிக்க இந்த மனைவி நன்றி மறந்த தன் கணவனாகிய அங்குதனின் உயிருக்காக மன்றாடி

ஞன். "சாந்தம் பொருந்திய சாத்மீகியாகிய அரசே, நன்மை மிகுந்த பிரபுவே! என் அன்புள்ள ரங்கநாயகியே, என்னுடன் கூட முழந்தாளிட்டுக் கெஞ்சி; நான் ஆயுளுடனிருக்கும் மளவும் உனக்குப் பணிவிடை செய்கிறேன்," என்னும் ரங்கநாயகிக்கு விண்ணப்பம் செய்தாா.

இதைக்கேட்ட அரசன். "புத்தியீனத் தனமாய் விருந்திப் பதைத்துப் பேசுகிறாய்; ரங்கநாயகி முழந்தாளிட்டுக் கெஞ்சுவாளாகில், அவள் தமையன் ஆன்மா இங்குவந்து அவளையும் தானிருக்குமிடம் அழைத்தேகும்" என்று கூறிய போதிலும், மங்களா பிடிவாதத்துடன், "ஓ, ரங்கநாயகி; பிரியமுள்ள ரங்கநாயகியே, என்னுடன் முழந்தாளிடு, நீ எதுவும் பேசவேண்டாம் நானே வேண்டுகோள்களைக் கூறுகிறேன். தவறுதலை யுடையவர்கள் கடைசியில் நன்மை மிக்கவர்களாகிறார்களென்று பெரியோர் சொல்வதுண்டு; இப்படி என் கணவரும் நன்மை யுடைவராவார் என்பது என் பூர்ண நம்பிக்கை. ரங்கநாயகியே, சற்றுதயவு கூர்ந்து முழந்தாளிட மாட்டாய்?" என்று பரிதபித்து வினவினாள். அப்பொழுது அரசன், "குணசீலனுக்காக அங்குதன் உயிரை யிழக்கிறான்" என்றான்.

ஆனல், கிருபையும் கனமும் மிக் காரியங்களையே செயவாள் என்று அரசனால் நம்பப்பட்ட ரங்கநாயகி, அரசன் கால்களில விழுந்து, "உதாரண குணமுள்ள அரசே, விராண தண்டனைக்குள்ளாக்கப்பட்ட இவர் (அங்குதர்) உயிரைக் கிருபை செய்து மன்னித்தால, எனது தமையனைப் பிழைக்கச் செயததற்குச் சமானம். என்னைக் காணும் வரை இவர் நிஷ்கபடமின்றி சித்தியத்துடன் நடந்ததாகத்தான் எனக்குத் தோன்றுகிறது; ஆகையால இவரை மன்னியும். என் தமையன் பிழை செய்தபடியால்தான் அவன் உயிரை யிழந்தான்," என்று சொலலி அங்குதன் உயிரைக் கெஞ்சிக் கேட்டாள்.

பெருந்தன்மை மிக்க இவள் தன் சத்ருவின் உயிரை கெஞ்சியதற்கு ஏற்ற பதிலாக, சிறையில் விடுபடும்பொழுதும் சாகப்போகிறேனென்றெழிய வேறெண்ணங்களைக் கொண்டிராத குணசீலனை வரவழைத்து, துக்கத்தால், வருந்திய ரங்கநாயகியிடம் ஒப்புவித்து, "நீ என்னை மணம் புரியவேண்டும்; உனக்காக நான் குணசீலனை மன்னிக்கிறேன; நீ என்னை மணம் புரிவாயாகில் அவன் என் சகோதரனுமாயுமிருப்பான்," என்றான்.

தனக்கு இனி அபாயமில்லையென்றறிந்த அங்குதன் சற்று இனிய முகம்காட்ட அரசன், "நல்லது, அங்குதா, உன் காதலியை பிரியமாய் நடத்து; அவள் மேன்மை குணம் தான் இன்று உன் உயிரை விலக்கு வாங்கியது; மங்களா நீ சந்தோஷ மடைவாயாக! அங்குதா நீ அவளிடம் அன்புபாராட்டுவாயாக; அவள் பதிவிருதை என்பதெனக்குத் தெரியும்," என்றான்.

இதைக்கேட்ட அங்குதன், சற்று அதிகாரத்துடனிருக்கும் பொழுது, தான் எவ்வளவு துரோகியாயிருந்தான் என்பதை எண்ண, சாந்தமாயும், இரக்கத்துடனும் நடப்பதின் மேன்மையை நன்கறியலானான்.

குணசீலன் அம்புஜத்தை மணம்புரிய அரசன் மனதைக் கவர்ந்தன. சன்னியாசியாயிருக்கும் பொழுது கண்யம் மிக்க அரசன் செய்த நன்மைகளின் பொருட்டு ரங்கநாயகி, சந்தோஷத்துடன் அரசனை மணம்புரிய உடன்பட்டாள். அவள் அரசியாக வந்தது முதல், இவளது கற்புடைமையையே உத்தம உதாரணமாகக் கொண்ட அத்தேசத்துக் கன்னிகைகளனைவரும்; குணந்திருத்தப்பட்ட குணசீலனின் மனைவியாகிய அம்புஜத்தின் தவறுதலுக் காளாகவில்லை.

இரக்கத்தையே தெய்வமாகக்கொண்ட, கணவர்களிலும் அரசர்களிலும் பூர்ண சந்தோஷத்தையு மடைந்த பல்லவராயன் தன்னால் நேசிக்கப்பட்ட ரங்கநாயகியுடன் வெகுநாள் அரசு புரிந்தான்.

ராஜகோபாலாசாரி.

விதியை வெல்லும்மதி.

ஒரு சிறு கதை.

காசிமாநகரத்தில் விசுவநாத சாஸ்திரி என்று ஒரு பிராமணன் இருந்தான். அவன் பாட்டனார் விசுவநாத தீக்ஷிதர் மஹாமேதாவி. தென்னாடெங்குந் தமது அருமையான கல்வியின் கீர்த்திப் பிரதாபத்தைப் பரவச்செய்து, பின்பு வட திசைக்குச் சென்று வாரணாசி வித்வசிரோமணிகளிடம் "வேதாந்த கேசரி" என்ற புகழ்ப்பட்டம் பெற்று, அந்நாட்டு அரசர் வேண்டியவாறு அப்புண்ணிய க்ஷேத்திரத்திலேயே தங்கலானார். அவர் புத்திரர் சாமிநாத சாஸ்திரியார் அவ்வளவு படித்தவரன்று; கொஞ்சம் புராண இதிகாச பாராயணத்துக்கு வேண்டியமட்டுமே ஸம்ஸ்கிருதப் பயிற்சி யுடையவர். அவர் மகன் விசுவநாத சாஸ்திரிக்கோ, பாஷா ஞானமே கிடையாது; முன்னோர் பேரை வைத்துக்கொண்டு பிராமணார்த்தம் சாப்பிட்டும், கோதானம் வஸ்திரதானம் முதலிய தானங்கள் வாங்கியும் காலக்ஷேபம் செய்து வந்தார். சாமிநாதன், சங்கரன், சுப்பிரமணியன் என இவருக்கு மூன்று குமாரர்களிருந்தார்கள். இப்பிள்ளைகள் முழுச் சோம்பேறிகள்! தேர்ந்த சாப்பாட்டு ராமன்கள் தன் கல்விக்குறையை ஒருவாறு உணர்ந்திருந்த அவர்கள் பிதா எத்துணை முயன்றும், அடித்தும், திட்டியும் அவர்கள் புத்தி படிப்பிற் சிறிதும் நுழையவில்லை. ஆகவே,

இக்குடும்பத்திற் கல்விப்பயிற்சி கரும்பின் வளர்ச்சிபோலவே யாயிற்று.

ஆப்தீகம், ஏகோதிஷ்டம், சவண்டி முதலியன எத்தனை ஆபீசத்திலோ தின்றுகொழுத்த விசுவநாத சாஸ்திரிக்கும் காலம் நெருங்கியது; இன்றோ நாளையோ என்று கணக்கிடலாயிற்று; அவர் மனைவி அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக ஒரு தூணிற் சாய்ந்து நின்றாள்; பிள்ளைகள் மூவரும், "அப்பா! நீர் போகிறீரே; இனி நாங்கள் எப்படிப் பிழைப்போம்; யார் சம்பாதித்துப் போடுவார்கள்?" என்று அலறியழுதார்கள். விசுவநாத சாஸ்திரிக்கு வித்வத் சம்பத்து இல்லையே யொழிய, குறும்பும் குயுக்தியும் ஏராளமாயுண்டு. "குணம் கொன்றாற்போம்" என்று பழமொழி யுண்டே. அவர் குறும்பு அச்சமயத்திலும் வெளிப்பட்டது. அவ்வாறழுத தம் பிள்ளைகளை நோக்கி மேல்மூச்சும் கீழ்மூச்சும் தூத்த, வெகு சிரமத்துடன் பின் வருமாறு சொன்னார்: "எல்லாருக்கும் சுவாமி யிருக்கிறார்; அவர் காப்பாற்றுவார். எனக்குக் கொஞ்சம் பசுக்களைத் தவிர வேறொரு சொத்துமில்லை. அந்தப் பசுக்களை உங்களுக்குள் சண்டையிடாமல், நான் இப்பொழுது சொல்லுகிறபடி நீங்கள் பாகம் செய்து கொள்ளுங்கள். அடே சாமிநாதா! நீ மூத்தவன், சீமந்த புத்திரன், உள்ளதில் பாதியை நீ யெடுத்துக் கொள்; சங்கரன், உள்ளதில் கால்வாசியை வைத்துக் கொள்ளட்டும்; சுப்பிரமணியன், மொத்தத்தில் ஐந்திலொன்றை வைத்துக் கொள்ளட்டும். நீங்கள் மூவரும் ஐந்துமாதமும், நாலுமாதமும், மூன்றுமாதமுமாக ஒவ்வொரு வருஷமும் அவள் அந்திய கால மட்டும் உங்கள் தாயாரைக் காப்பாற்றுங்கள்," என்றார். அப்பொழுது பக்கத்திலிருந்த எதிர் வீட்டு நாராயணையர், "என்ன காணும், இப்பொழுதும் புதிர்ப் போடுகிறீரே. எதாவது பசு மிஞ்சினாலோ?" என்று கேட்டார்.

அதற்கு விசுவநாத சாஸ்திரி, "மிஞ்சினால் எல்லாருமாகக்

கறிவைத்துத் தின்னட்டும் பிழைக்கத் தெரியாவிட்டால், எல்லா வற்றையும் நீர் ஓட்டிக்கொண்டு போய்விடும்,'' என்றார்.

அகஸ்மாத்தாய் அப்பொழுது பெரியதோர் ஜுரத்தல் வந்து, காலவரைப்படி அவர் பிராணனும் போய்விட்டது. அபரகிரியை கள் எல்லாம் முடிந்து சில நாட்களுக்குப்பின், மூன்று பிள்ளை களும் பிதிர்வாக்கியப்படி சொத்தைப் பகிர்ந்துகொள்ள விரும்பி னார்கள். மொத்தம் பத்தொன்பது பசுக்கள் இருந்தன. இன்ன செய்வதென்று தெரியவில்லை. $9\frac{1}{2}$-பசுவை எப்படி யெடுத்துக் கொள்வான்? அவ்வாறே மற்ற இருவரும் விழிக்கத் தொடங்கி னார்கள். முதலில் விளையாட்டுப் பேச்சாகச் சொல்லிப், பின்பு எதிர் வீட்டு நாராயணையர் மெய்யாகவே, சாஸ்திரி மரணகால வாக் குப்படி, பசுக்கள் பத்தொன்பதும் தமக்கே யென்று வாதிக்கத் தொடங்கினர். பிள்ளைகள், "இதுவும் விதிதான்; தலையில் துணி யைப் போட்டுக்கொண்டு எங்கேயாவது ஊட்டுப்புரை தேட வேண்டியதுதான்,'' என்று சொல்லி மயங்கலானார்கள். ஒன்றும் தோன்றாமல் தங்கள் தந்தையை நொந்துகொண்டு, தாயிடம் முறை யிட்டார்கள். நெடுநாட் பழக்கத்தால், பார்வதி யம்மாளுக்கும் தன் புருஷனது குயுக்தி கொஞ்சமுண்டு; உள்ள சொற்ப ஆஸ் தியையும் எதிர் வீட்டாருக்குத் தன் கணவன் விட்டுப் போகமாட் டானென்பதும் அவளுக்கு நன்றாய்த் தெரியும். சிறிதுநேரம் யோசித்துப் பார்த்துப், பின்பு, அவள், வீதியில் மேய்ந்துகொண் டிருந்த ஒரு பசுவையும் தொழுவத்துள் அடைத்துத், தங்கள் தகப்பனார் உத்தரவுப்படி பாகஞ் செய்துகொண்டு, பின்பு அதை வெளியே ஓட்டிவிடும்படி அவர்களுக்குச் சொன்னாள். அவர் களும் அவ்வாறே செய்து, நாம் விதியென்று நினைப்பதில் அநே கத்தை மதியால் வெல்லலாம் என்னும் உண்மையைத் தெரிந்து கொண்டார்கள்.

"கௌசிகன்"

"PHYSICAL EXERCISE."

'தேகப்பயிற்சி.'

சரீராரோக்கியத்தின் பொருட்டாக தேகப்பயிற்சி ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாதது. அன்றியும் தேகப்பயிற்சியை அனுசரிப்பதால் நாளுக்குநாள் பல அவயவங்கள் உறுதியாயமைந்து தேகத்திற்கு வலிமையைக் கொடுக்கும். நாடோறும் காலை மாலை வேளைகளில் சுமார் ஒன்றல்லது அரைமணி நேரமாவது தேகப்பயிற்சி செய்து வரவேண்டும். அப்பொழுதுதான் நமது தேகம் வயிரம் போன்றதாகும். தற்காலத்தில நாகரிகமும் கல்வி யறிவும் அபரிமிதமாகிவிட்டபோதிலும் மானிடரில் பெரும்பான்மைபோர் தேகப்பயிற்சியைக் கவனிக்கின்றார்களில்லை. சாப்பாடு, சம்மானம், பரிதானம், பரதாரம், வாதாடல், சூதாடல், கட்குடித்தல், லாகிரி பிடித்தல் முதலியவைகளிலேயே விருப்பங்கொண்டிருக்கின்றனர் சிலர். மற்றுஞ்சிலர் ஆபீஸ் தொல்லை வீட்டுச்சள்ளை, ரயில்வசரம் முதலிய காரணங்களால் தேகப்பயிற்சி செய்வதற்குச் சாவகாசமில்லை யென்று சாதிக்கின்றனர். இன்னுஞ்சிலர் தேகப்பயிற்சியின் நற்பயன்களை யறிந்திருந்தபோதிலும் தமக்கு அனுவசியமென்று அசட்டைசெய்து வாளா விருக்கின்றனர்.

மல்லின்ஸ்புட் (Mellins Food), காட்லிவர் ஆயில் (Codliver-oil) முதலியவைகளை உட்கொள்ளுவதினாலேயே நாம் பலசாலிகளாக மாட்டோம். அவைகளெல்லாம் தேக புஷ்டிக்காக ஏற்படுத்தப் பட்டவைகளன்றி தேக வலிமைக்கன்று. மெலிந்த சரீரமுடையவன் தேகப்பயிற்சியால் பலவானாகக்கூடும். அன்றித்தடித்த

பருமனுன தேகத்தை யுடையவன் பலசாலியாக மாட்டான். தேகப்பயிற்சியில் சிறந்த மெலியோன் தேகப்பயிற்சியில்லாத ஒரு சதையுள்ளவனை எளிதில் கீழே வீழ்த்தித்தள்ள முடியும். அன்றியும் தேகப்பயிற்சியானது இளமைப் பருவந்தொட்டே மாளிடருக்கு அவசியம். நமது சிறு பிராயத்தில் தேகப்பயிற்சியைத் துவக்கினுல்தான் யுக்த வயது வந்தபோது பலசாலியாவோம். ஆகையினுல்தான் பாடசாலைகளில் பிள்ளைகளுக்கு 'டிரில்' (Drill) என்று அப்பியாசம் செய்து வருகின்றனர். அன்றியும் இப்பொழுது பாலியமாணவர்களின் நன்மைக்காக ஏற்படுத்தப் பட்டுள்ள நூதனச் சீர் திருத்தங்களுக்காக போதனு சங்கத்தாருக்கு நாம் மிகவும் நன்றியறிவுள்ளவர்களாகக் கடவோம். பிள்ளைகளை ஆரோக்கியமுள்ளவர்களாகவும் பலசாலிகளாவும் மாற்றுவது அவர்களின் நோக்கங்களிலொன்று. அதற்காக, டிரில் முதலியவைகளோடு இப்பொழுது 'தோட்டவேலை' யென்று புதிய பாகம் ஏற்படுத்தி யிருக்கிறுர்கள். சிறு பிள்ளைகள் தாமே விதைத்தல், நீரூற்றுதல். களை பிடுங்குதல், பலனைச் சேர்த்தல் முதலிய காரியங்களால் அவர்களுக்குப் பண்பினைச் செவ்வனே விளங்கச் செய்கிறுர்கள். இந்த சிற்சில விளையாட்டுகள் சிறுவர் மனதை உற்சாகப் படுத்துவதுடன் அவர்களுக்கு தேக வலிமையையுங் கொடுக்கின்றன. தற்காலத்தில் நாகரீகம் அதிகரித்து மேல் நாட்டாருடைய தேகப்பயிற்சி பரவியிருக்கிறது. வீட்டு வெளிப புறத்துப் பயிற்சிகள் Outdoor games) கிரிக்கெட் டென்னிஸ் பாட்மிடன், ஹாக்கீ, ரக்பீ (cricket, Tennis, Batmintou, Football, hockey, Rugby) முதலியன. வீட்டினுட்புறஞ் செய்வது (Indoor games) சிலம்பப் பயிற்சிகள் முதலியன. தற்காலத்தில் மேற்கூறிய வெளிப்புறத்து அப்பியாசங்களுக்குக்காக நியமிக்கப்பட்ட பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள் முதலியவைகளில் நூற்றிலொன்று இரண்டுதான் மாணவரின் தேக வலிமையின் பொருட்டாக விருப்பது. மற்றவைகளெல்லாம் பொழுது

போக்கு விளையாட்டுகளுக்காகவே ஏற்படுத்தப் பட்டவைகளாகப் பாவிக்கப்பட்டு வருகின்றன.

ஆகையால் நமது இளமைப் பருவத்திலேயே தேகப்பயிற்சியை கைக்கொண்டு பலசாலியாக முயலவேண்டும். இல்லாவிட்டால் நமது குழந்தைகளும் வல்லமையற்று நம்மைப்போலவே மெலிந்திருக்கும். எனவே மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனுக்கும் தேகப்பயிற்சி அத்தியாவசியமென்று ஏற்படுகின்றது.

C. S. துரைசாமி.

வர்த்தமானம்

இந்தியா மொத்தத்துக்கு ஜனத்தொகை.—ஸென்ஸஸ் கமிஷனர் சென்ற மாதம் 10-ந்தேதி எடுக்கப்பட்ட ஸென்ஸஸ்படி இந்தியா மொத்தத்துக்கும் ஜனத்தொகை 31,50,01,099-என்று தெரிவித்திருக்கிறார். பிரிட்டிஷ் நாடுகளின் ஜனத்தொகை 24,4',72,371-தேசமன்னர்களின் சமஸ்தானங்களது ஜனத்தொகையும் ஏஜென்ஸிகளின் ஜனத்தொகையும் சேர்ந்து 7,08,28,728-பிரிடிஷ் நாடுகளின் ஜனத்தொகை 100-க்கு 5.4-வீதமுய் சமஸ்தானங்களின் ஜனத்தொகை 100-க்கு 12.9-வீதமும் அதிகமாயிருக்கின்றன. இதற்குத் தேசமன்னர்களின் சமஸ்தானங்கள் ஜனத்தொகையின் பெருக்குக்கு இடங்கொடுக்கும் படியாயிருந்து வருவதும், கொஞ்ச காலமாய் அவைகளில் பஞ்சம் முதலியவைகள் தெளிந்து சுபீட்சம் மேலிட்டிருப்பதும் காரணங்களெனப் படுகிறது. பிரிடிஷ் நாடுகளுக்குள்ளே மத்திய மாகாணங்களிலும் பேரார் நாட்டிலும் 100 க்கு 16.3-வீதமும், பர்மாவில் 100-க்கு 14,9-வீதமும், கீழ் வங்காளத்தில் 100-க்கு 11 4-வீதமும்' சென்னையில் 8.3-வீதமும்' பம்பாயில் 6-வீதமும், வங்காளத்தில் 3-வீதமும், ஜனத்தொகை யதிகரித்திருக்கிறது. பஞ்சாபில் 100-க்கு 1.8-வீதமும், ஐக்கிய மாகாணங்களில் 100 க்கு ஒன்று வீதமும் ஜனத்தொகை குறைந்திருக்கிறது.

ஜார்ஜ் சக்கரவர்த்திக்கு ஒரு விண்ணப்பம்.-ஜார்ஜ் சக்கரவர்த்தி இந்நாட்டுக்கு வந்திருக்கும்போது இந்திய ராணுவத்தாரின் உணவுக்காக வருஷந்தோறும் ஏறக்குறைய 8,50,000 பசுமாடுகள் கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டுமென்றும், ராணுவத்தாருக்கு வேண்டிய மாமிசம் டப்பிடப்பியாய் மேல்நாட்டிலிருந்து தருவிக்கப் படலாமென்றும் ஒரு விண்ணப்பம் தயார் செய்து அவருக்குக் கொடுக்கப்படப் போகிறதென்று தெரிகிறது. அந்த விண்ணப்பம் சில பிரதிநிதிகள் மூலமாய்க் கொடுக்கப் படுமாம். அதற்காக ஜப்பல்பூர் வாசியாகிய மிஸ்டர் K. S. நிஸ்ஸல்வாலா என்பவர் ஊரூராய்ச் சென்று விண்ணப்பத்தில் கையெழுத்துகள் வங்கி வருகிறார்.

சி. எஸ். எம். காலேஜ்.—சர்வகலா சங்கத்துப் புதிய ரெகுலேஷன் படி சி. எஸ். எம். காலேஜ் நடத்துவது அசாத்தியமென்று காலேஜ் அதி

காரிகள் அதை மூடிவிட்டார்கள். காலேஜ்பிள்ளைகளுக்கெல்லாம் லீவிங் சர்டிபிகேட்டுகள் கொடுக்கப்பட்டன. முதல் லயன் பீச்சிலிருக்கும் இக்காலேஜின் பெரிய கட்டிடத்தை நாஷனல் பாங்கு ஆப் இந்தியாக் காரர்கள் விலைக்கு வாங்கிவிட்டார்கள். இந்தக் காலேஜ் 74-வருஷமாக நடந்து வந்திருக்கிறது.

புனுவில் விவசாயிகளின் பிள்ளைகளுக்கு ஒரு பாடசாலை—டாக்டர் மான்சிபார்சின்மேல் சென்ற வருஷம் ஜூன் மாதப் பூனுவில் விவசாயிகளின் பிள்ளைகளுக்காக ஒரு போஜனசாலையும் பள்ளிக்கூடமும் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்டது. இப்பள்ளிக்கூடத்தில் 13-வயதிலிருந்து 16 வயதுக் குட்பட்ட விவசாயிகளின் பிள்ளைகள் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள். சென்ற வருஷம் சுமார் 21-பிள்ளைகள் படிப்புக் கற்றுக்கொண்டார்கள். தங்கள் காலத்தில் பாதியைப் படிப்புக் கற்றுக் கொள்வதிலும் மற்றைய பாதியைத் தோட்டம் வயல்களில் வேலை செய்வதிலும் கழித்து வந்தார்கள். அப்பாடசாலை மிக்க உபயோகமான வேலையைச் செய்து வருகிறதென்றறியச் சந்தோஷப் படுகிறோம்.

முடிசூட்டுக்கு வரவழைக்கப்பட்டிருக்கும் பத்திராதிபர்கள்.—முடி சமயத்தில் இங்கிலாந்தி லிருக்க பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தி லுள்ள பல பத்திராதிபர்களுக்கு ஏகாதிபத்திய பத்திரிகா சங்கத்தார் வரவழைப்புக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். இந்தியாவி லுள்ள பத்திராதிபர்களில் மதராஸ் மெயில் மிஸ்டர் லே. இ. கிர்வனும், மதராஸ் டைம்ஸ், மிஸ்டர் ஏ. ஜே. பக்கிலும், பம்பாய் டைம்ஸ் ஆப் இந்தியா மிஸ்டர் ஏ. ப்ரைட்டும், லாகூர் பயோனிபர் மிஸ்டர் சி. ரட்டிகனும், ரங்கூன் கஜெட் மிஸ்டர் எப். மெக்கார்த்தியும் பிரதிநிதிகளாகப் போவார்கள்

முதல் முதல் ஆகாயவிமான மேறியிறங்கிய ஒரு தமிழ் வாலிபன்-புதுச்சேரியிலிருந்து பிரான்சுக்குச்சென்று வாசித்துவரும் நாராயண பிள்ளை யென்னும் ஒரு வாலிபர் சில தினங்கட்கு முன்னர் ஆகாயவிமான மீதேறிச் சுகமாயிறங்கினாராம். அவர் ஆகாய விமானமேறிக் கடல்மார்க்கமாகச் சென்ற புகைப்படம் புதுச்சேரியில் கிடைக்குமாம்.

ஆமதாபாத்தில் பார்சிப் பெண்கள் பாடசாலை—ஆமதாபாத்தில் சமீபகாலத்தில் ஒரி பார்சியசனவான் 15-ஆயிரம் ரூபாம் நன்கொடையளித்துபார்சிப் பெண் பாடசாலை ஒன்று புதிதாய்ஸ்தாபித்தார். இப்பாடசாலையில் மதக்கல்வி போதிக்கப்படுதெற்காகச் சிங்கப்பூர் வாசியாகிய ஓர் பார்சி கனவான் 8-ஆயிரம் ரூபா நன்கொடையாகக் கொடுத்திருக்கிறாரென்று கேள்விப்படுகிறோம்.

தென்னிந்தியா ரயிலில் நேர்ந்ததோரு விபத்து.—இம்மாதம் 17-தேதி மாலை சென்னையினின்றுஞ் சென்ற சிலோன் போட்மெயில் வைதீச்சுரன்கோயிலைக் கடந்து போகையில் எதிரே வந்த சமான் வண்டியொடு மோதிற்று. அதனால் சிலவண்டிகள் தண்டவாளத்தை விட்டு விலகிப்போயின. இவர்க்கு அற்பமான காயமுண்டாயிற்றும்

ஆச்சரியமானகிணறு—ஜாவாதேசத்தில் போகரென்னுமிடத்தில் ஓராச்சரியமான கிணறிருக்கின்றதாம்; அக்கிணற்றில் எம்மிருதுவான வஸ்துவைப் போட்டாலும் அதை அக்கிணற்று நீர் கல்லுப்போலக் கெட்டியாகச் செய்து விடுகின்றதாம்.